**தலைப்பு 166 – நீர் வழங்கல் அமைச்சு**

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

தலைப்பு 166 - நீர்வழங்கல் அமைச்சின் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்றுடன் கூடிய 2022 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்துடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 11(1)ஆம் பிரிவின் பிரகாரம் நீர் வழங்கல் அமைச்சின் நிதிக்கூற்றுக்கள் தொடர்பான எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் உள்ளடங்கிய பொழிப்பு அறிக்கை 2023 ஏப்ரல் 26 ஆந் திகதி பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 11(2)ஆம் பிரிவின் பிரகாரம் இராஜாங்க அமைச்சின் விரிவான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2023 மே 09 ஆந் திகதி பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 10 ஆம் பிரிவின் பிரகாரம் இந்த அறிக்கை பாரளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படுகின்றது.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களிலிருந்தான தாக்கத்தை தவிர்த்து நிதிக்கூற்றுக்கள் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நீர் வழங்கல் அமைச்சின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் மற்றும் காசுப்பாய்ச்சல் என்பவற்றை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு கோட்பாடுகளுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது. இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது பொறுப்பு, கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும், கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்பு

பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு கோட்பாடுகளுக்கு அமைவாகவும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 38 பிரிவில் குறிப்பிடப்பட்ட ஏற்பாடுகளுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று இன்றி நிதிக்கூற்றுக்களை தயாரிக்க கூடிய வகையில் உள்ளகக் கட்டுப்பாட்டினை தீர்மானித்தல் ஆகியன கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாகும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) பிரிவின் பிரகாரம் அமைச்சினால் வருடாந்த மற்றும் உரிய நேரத்தில் நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு இயலுமான வகையில் தனது வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக உரிய வகையில் புத்தகங்கள் மற்றும் அறிக்கைகளை பேணிச் செல்லல் வேண்டும்.

தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 38(1)(இ) உப பிரிவின் பிரகாரம் அமைச்சின் நிதிக் கட்டுப்பாட்டிற்காக ஆக்கபூர்வமான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையொன்றை தயாரித்து பேணிச்

செல்லுவதனை கணக்கீட்டு உத்தியோகத்தர் சான்றுபடுத்த வேண்டியதுடன், அம்முறையின் செயற்திறன் தொடர்பாக காலத்திற்கு காலம் மீளாய்வொன்று செய்யப்பட்டு அதன் பிரகாரம் முறைமை செயற்திறனாக மேற்கொள்வதற்கு தேவையான மாற்றங்கள் செய்யப்படல் வேண்டும்.

### 1.4 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்பு

நிதிக்கூற்றுக்கள், ஒட்டுமொத்தமாக மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் வழங்குதல் மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கையை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடிகள் அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன், அதன் பொருண்மை தொடர்பில் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு அவற்றை பயன்படுத்துவோரால் எடுக்கப்படும் பொருளாதார தீர்மானங்களின் மீது தங்கியுள்ளது.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம், கணக்காய்வின் பகுதியொன்றாக என்னால் கணக்காய்வின் போது துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் கணக்காய்வு மேற்கொள்ளப்பட்டது. மேலும், என்னால்

- வெளியிடப்பட்ட கணக்காய்வு அபிப்பிராயத்திற்காக அடிப்படையொன்றினை பெற்றுக்கொள்ளும் போது, மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தினை இனங்காணல் மற்றும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகள் திட்டமிடப்பட்டு நடைமுறைப்படுத்தப்பட்டன. பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதற்கு, அவை தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் ஆகியவற்றால் ஏற்படுகின்றமை காரணமாக அமைகிறது.

- உள்ளகக் கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமான தன்மை தொடர்பில் அபிப்பிராயமொன்றினை தெரிவிக்கும் எண்ணத்தில் அல்லாது, சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதற்காக உள்ளக கட்டுப்பாடு தொடர்பில் புரிந்துணர்வொன்று பெற்றுக்கொள்ளப்பட்டது.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமான மற்றும் நியாயமான வகையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளமையை மதிப்பீடு செய்தல்.

- நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்கு அடிப்படையாக கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளதாக மற்றும் வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்கள் ஒட்டுமொத்தமாக மதிப்பீடு செய்யப்பட்டன.

எனது கணக்காய்வில் இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புக்கள் பிரதான உள்ளகக் கட்டுப்பாட்டு பலவீனங்கள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பாக கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு அறிவிக்கப்பட்டது.

## 1.5 ஏனைய சட்டத்தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 6(1)(ஈ) பிரிவின் பிரகாரம் பின்வரும் விடயங்களை நான் வெளிப்படுத்துகின்றேன்.

(அ) நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் ஒத்திருந்தது என்பது,

(ஆ) முன்னைய ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்களில் என்னால் மேற்கொள்ளப்பட்டிருந்த பரிந்துரைகள் நடைமுறைப்படுத்தப்பட்டிருந்தன.

## 1.6 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 1.6.1 கணக்கீட்டு குறைபாடுகள்

**(அ) வருமானமல்லாத பெறுவனவுகள்**

| கணக்காய்வு அவதானிப்பு | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2022 திசெம்பர் 13 ஆந் திகதிய அரச கணக்குகள் வழிகாட்டி இலக்கம் 2022/05 இன் 3.2 ஆம் பந்திக்கமைய அறிக்கையிடும் நிறுவனத்தின் நிதிக்கூற்றுக்களில் குறிப்பிடப்பட்டுள்ள தொகைகள், இறுதி திறைசேரியின் கணக்கு கூற்றுகளில் குறிப்பிடப்பட்டுள்ள தகவல்களுடன் இணங்குவதாக சான்றுபடுத்தப்பட வேண்டிய போதிலும், திறைசேரியின் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ள மீளாய்வாண்டுக்குரிய வைப்புப் பெறுவனவுகள் ரூபா 1,712,060 மற்றும் வைப்புக் கொடுப்பனவு ரூபா 1,589,597 தொகையானது நிதிச் செயலாற்றல் கூற்றில் முறையே ரூபா 1,482,085 மற்றும் ரூபா 1,478,947 ஆக பதிவு செய்யப்பட்டிருந்தது. அதற்கமைய வைப்புப் பெறுவனவுகள் மற்றும் கொடுப்பனவுகளின் கூட்டுத்தொகை ரூபா 340,625 இனால் குறைத்துநிதிச் செயலாற்றல் கூற்றில் பதிவு செய்யப்பட்டிருந்தது. | 2022 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த பரீட்சை மீதியின் பிரகாரம், ஆண்டினுள் வைப்புப் பெறுவனவுகள் மற்றும் கொடுப்பனவுகள் உள்ளடக்கப்பட்டு நிதிச் செயலாற்றல் கூற்று தயாரிக்கப்பட்டுள்ளது. | அரச கணக்குகள் வழிகாட்டியின் பிரகாரம் நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட வேண்டும். |

**(ஆ) மீண்டெழும் செலவினங்கள்**

| கணக்காய்வு அவதானிப்பு | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2022 ஒக்தோபர் 17 ஆந் திகதிய குறைநிரப்பு மதிப்பீட்டின் ஒதுக்கீட்டு அதிகார இலக்கம் 134 இன் பிரகாரம் 166-01-01-1102/11 ஆம் இலக்கமுடைய செலவின விடயத்திற்காக ரூபா 500,000 ஆன குறைநிரப்பு மதிப்பீட்டு ஒதுக்கப்பட்டிருந்த போதிலும், அந்த பெறுமதி நிதிக்கூற்றுக்களில் ஏசீஏ 2(ii) செலவினக் கூற்றில் பதிவு செய்யப்பட்டிருக்கவில்லை. | 2022 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளபடியாக திறைசேரியின் அச்சிடப்பட்ட பிரதிகள் SA-XXX இல் உள்ளடக்கப்பட்டிராத காரணத்தால் அந்த பெறுமதிகள் இல்லாது இறுதிக் கணக்குகள் தயாரிக்கப்பட்டுள்ளன. | 2022/05 ஆம் இலக்க அரச கணக்குகள் வழிகாட்டியின பிரகாரம் நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட வேண்டும். |

**(இ) ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்கள்**

| கணக்காய்வு அவதானிப்பு | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டினுள் 02 வாகனங்களுக்கு மற்றும் 03 அலுவலக உபகரணங்களுக்கு ஏற்பட்டுள்ள சேதங்கள் காரணமாக அரசாங்கத்திற்கு ஏற்பட்டிருந்த ரூபா 1,965,742 தொகையான நட்டம் மற்றும் தொடர்ந்தும் அறவிடப்படாது காணப்பட்ட மீதிகள் தொடர்பான தகவல்கள் நிதிக்கூற்றுக்களின் குறிப்பு இலக்கம் (i) நட்டங்கள் மற்றும் கைவிடல்தொடர்பான கூற்றின் (i) மற்றும் (ii) பந்திகளின் கீழ் காண்பிக்கப்பட்டிருக்கவில்லை. | ஒவ்வொரு வாகன விபத்துக்கான பழுதுபார்ப்பு செலவுகள் காப்பீட்டுக் கோரிக்கைகள் மூலம் திருப்பிச் செலுத்தப்பட்டுள்ளன, எனவே அரசாங்கத்திற்கு எந்தச் செலவும் இல்லை. மற்றைய வாகனத்தின் விபத்து தொடர்பான நட்டஈட்டை செலுத்துமாறு சாரதிக்கு அறிவிக்கப்பட்டுள்ளது. அலுவலக உபகரணங்கள் தொடர்பான தகவல்கள் எதுவும் வெளியிடப்படவில்லை | 2022/05 ஆம் இலக்க அரச கணக்குகள் வழிகாட்டிக் கோவையின் பிரகாரம், நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட வேண்டியமை. |

**(ஈ) வங்கிக் கணக்குகளை செயற்படுத்தல்**

| கணக்காய்வு அவதானிப்பு | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2022 நவம்பர் 31 ஆந் திகதிய வங்கிக் கூற்றின் பிரகாரம், நீர் வழங்கல் இராஜாங்க அமைச்சின் 7042707 ஆம் இலக்கமுடைய வங்கிக் கணக்கின் மீதி ரூபா 13,232,474 ஆக | கணக்காய்வில் சுட்டிக்காண்பிக்கப்பட்டுள்ள விடயங்களை ஏற்றுக்கொள்கின்றேன். | 2022/05 ஆம் இலக்க அரச கணக்குகள் வழிகாட்டிக் கோவையின் பிரகாரம், நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட வேண்டியமை. |

காணப்பட்டதுடன், அந்த பெறுமதி நிதிக்கூற்றுக்களின் பின்னிணைப்பு (viii) இன் வங்கிக் கணக்குகள் தொடர்பான நிலைமைக் கூற்றில் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை.

## 2. நிதி மீளாய்வு

### 2.1 செலவின முகாமைத்துவம்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்பு | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப்பிரமாணக் கோவையின் நிதிப்பிரமாணம் 74 இன் பிரகாரம், எதிர்பார்க்காத நிலைமைகளின் அடிப்படையில் ஏற்படும் அத்தியாவசியமான செலவினங்களுக்காக மாத்திரம் குறைநிரப்பு மதிப்பீடுகள் விண்ணப்பிக்கப்பட வேண்டிய போதிலும், அது தொடர்பில் கருத்திற்கொள்ளாது குறைநிரப்பு மதிப்பீட்டு ஒதுக்கங்கள் மேற்கொள்ளப்பட்ட காரணத்தால் மீளாய்வாண்டின் இறுதியளவில் 08 செலவின விடயங்களின் கீழ் ஒதுக்கப்பட்டிருந்த ரூபா 2,740,000 தொகையான மொத்த குறைநிரப்பு மதிப்பீடும் பயன்படுத்தப்படாது காணப்பட்டதுடன், 07 செலவின விடயங்களுக்காக ஒதுக்கப்பட்டிருந்த நிதியேற்பாடுகளிலான சேமிப்பு 17 சதவீதம் முதல் 93 சதவீதம் வரையான வீச்சில் காணப்பட்டது. | நீர் வழங்கல் அமைச்சின் அமைச்சரவையின் பதவியணிக்குரிய மொத்த நிதியேற்பாடு பயன்படுத்தப்படாமை, கொரோனா அச்சுறுத்தல், அமைச்சர்கள் மூன்று தடவைகள் மாற்றமடைதல், அரச செலவின முகாமைத்துவ சுற்றறிக்கை, எரிபொருள் தட்டுப்பாடு மற்றும் செலவினங்களை உரிய முறையில் கண்காணித்து முகாமை செய்தல் மற்றும் ஆட்சேர்ப்பதற்கு திட்டமிட்ட பதவியணியை விட குறைவான எண்ணிக்கைக்கு அங்கீகாரம் கிடைத்தல். | குறைநிரப்பு மதிப்பீட்டு நிதியேற்பாட்டினை பெற்றுக்கொள்ளும் போது நிதிப்பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஆ) | இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப்பிரமாணக் கோவையின் நிதிப்பிரமாணம் 50 இன் பிரகாரம், சிக்கனத்தன்மை மற்றும் செயற்திறன் தொடர்பில் கவனம் செலுத்தப்படாது மதிப்பீடுகள் தயாரிக்கப்பட்ட காரணத்தால் 79 செலவின | தேசிய வரவு செலவுத் திட்ட சுற்றறிக்கையின் இலக்கம் 03/2022 இன் பிரகாரம், செலவின விடயங்களின் செலவினங்களை கட்டுப்படுத்தல், எரிபொருள் தட்டுப்பாடு, காலாண்டினுள் | நிதிப்பிரமாணத்தின் பிரகாரம் நிதியேற்பாட்டின் தேவைப்பாட்டிழன திட்டவட்டமாக இனங்கண்டு வருடாந்த செலவின மதிப்பீடுகள் தயாரிக்கப்பட |

| | | |
|---|---|---|
| விடயங்களுக்காக ஒதுக்கப்பட்டிருந்த நிதியேற்பாடுகளிலிருந்து 12 சதவீதம் முதல் 100 நதவீதம் வரையான வீச்சில் நிதியேற்பாடுகள் எஞ்சியிருந்தன. அவற்றுள் 16 செலவின விடயங்களுக்காக ஒதுக்கப்பட்ட ரூபா 83,698,829 தொகையான மொத்த நிதியேற்பாடும் எஞ்சியிருந்தது. | உரிய கட்டுநிதி கிடைக்காமை, அமைச்சின் பதவியணி மூன்று முறை மாற்றமடைதல், அரச செலவின முகாமைத்துவ சுற்றறிக்கைகளுக்கு இணங்க புதிய செயற்திட்டங்கள் ஆரம்பிக்கப்படாமை, மூலப்பொருள் பற்றாக்குறை மற்றும் விலைகள் உயர்வடைந்தமை காரணமாக ஏனைய ஒப்பந்தங்களை எதிர்பார்த்த காலப்பகுதியினுள் பூர்த்தி செய்ய முடியாதிருந்தது. | வேண்டியமை. |

## 2.2 பொறுப்புகள் மற்றும் கடப்பாடுகளை ஏற்படுத்தல்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்பு | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2017 ஏப்ரல் 27ஆந் திகதிய 255/2017 ஆம் இலக்க அரச கணக்குகள் சுற்றறிக்கையின 02 ஆம் பந்தியில் காண்பிக்கப்பட்டுள்ள மதியுரைகளுக்கு முரணாக 166-2-16-5-2506-0/11 ஆம் இலக்க செலவின விடயத்தின் கீழ் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த நிதியேற்பாட்டினை விஞ்சி ரூபா 4,622,422 ஆன கடப்பாடுகள் ஏற்படுத்திக்கொள்ளப்பட்டிருந்தது. | சுங்க வரியிலிருந்து நீர் சுத்திகரிப்பு முறைக்கு விலக்கு அளிக்க தேவையான மதிப்பிடப்பட்ட தொகையை செயல் திட்டத்தில் சேர்க்க முடியவில்லை. எனவே, இந்த ஒதுக்கீட்டை வரம்பு மீறி செலவிட வேண்டியிருந்தது. | சுற்றறிக்கை அறிவுரைகளுக்கமைய நடவடிக்கை எடுக்க வேண்டும். |

## 2.3 சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணங்காமை

தெரிவுக் கணக்காய்வு பரிசோதனையில் அவதானிக்கப்பட்ட சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களிலுள்ள இணக்கமின்மைச் சந்தர்ப்பங்கள் கீழே பகுப்பாய்வு செய்து காண்பிக்கப்பட்டுள்ளது.

**அவதானிப்பு**

| சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுக்கான தொடர்பு | பெறுமதி ரூபா | இணக்கமின்மை | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|
| அரச செலவின முகாமைத்துவம் தொடர்பில் 2010 மே 14 ஆந் திகதிய சீஏ/1/17/01 ஆந் திகதிய சனாதிபதி செயலாளரின் கடிதத்தில் 3.3 ஆம் பந்தி மற்றும் 2017 திசெம்பர் 21 ஆந் திகதிய 02/2017 ஆம் இலக்க சொத்துக்கள் முகாமைத்துவ சுற்றறிக்கையின் 2(iv) ஆம் பந்தி | - | சுற்றறிக்கையின அறிவுறுத்தல்களுக் கமைய நிதி மற்றும் திட்டமிடல் அமைச்சின் முன் அங்கீகாரத்தினை பெற்றுக்கொள்ளாது தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபைக்கு உரிய 04 வாகனங்கள் 02 வருடங்களுக்கு மேற்பட்ட காலமாக அமைச்சின் பதவியணியின் பயன்பாட்டுக்காக ஈடுபடுத்தப்பட்டிருந்தது. | நிதி மற்றும் திட்டமிடல் அமைச்சின் அங்கீகாரத்தினை பெற்றுக்கொள்ள கோரிக்கை முன்வைக்கப்பட்டுள்ளதுடன், தேவையான மேலதிக தகவல்களும் வழங்கப்பட்டுள்ளன. | சுற்றறிக்கை அறிவுரைகளுக்கமைய நடவடிக்கை எடுக்க வேண்டும். |

## 2.4 முறையற்ற கொடுக்கல் வாங்கல்கள்

### அதிகாரமற்ற கொடுப்பனவுகள்

| கணக்காய்வு அவதானிப்பு | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2022 ஆம் ஆண்டிற்கான நீர் வழங்கல் அமைச்சரின் தனிப்பட்ட பதவியணியாக நியமிக்கப்பட்ட 15 உதவிப் பதவியணிக்கு வழங்கப்பட்ட நியமனங்களை பொறுப்பேற்கும் கடிதங்களின் பிரகாரம் நியமனத் திகதி 2022 யூன் 27 ஆந் திகதி ஆன போதிலும், 2022 மே 24 ஆந் திகதி முதல் சேவையாற்றியதாக காரணங்களை குறிப்பிட்டு முறையான அங்கீகாரம் பெற்றுக்கொள்ளப்படாது அந்த உத்தியோகத்தர்களுக்கு அந்த திகதி முதல் 2022 யூன் 27 ஆந் திகதி வரையிலுமான காலப்பகுதிக்குதிய சம்பளம் மற்றும் படிகளாக ரூபா 1,402,827 தொகை செலுத்தப்பட்டிருந்தது. | 2022 மே 24 ஆந் திகதி முதல் கடமைகளில் ஈடுபட்டமையால் 2022 மே 24 ஆந் திகதி முதல் சம்பளங்கள் செலுத்தப்பட்டிருந்தன. 2022 மே 24 ஆந் திகதி முதல் அமுல்படுத்தப்படும் வகையில் 2022 யூன் 27 ஆந் திகதிய நியமனங்கள் வழங்கப்பட்டன. | உத்தியோகத்தர்களின் கவனயீனம் காரணமாக அரசாங்கத்திற்கு நட்டம் ஏற்படக்கூடாது. |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 செயற்திட்டங்களை நிறைவேற்றுவதிலான தாமதங்கள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்பு | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| கிராமிய நீர் வழங்கல் மற்றும் சுத்திகரிப்பு சேவைகளை மேம்படுத்தும் நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் ரூபா 68,097,893 ஆன மதிப்பீட்டு கிரயத்தின் அடிப்படையில் மெனிக்கடவர நீர் வழங்கல் செயற்திட்டம் 2019 ஒக்தோபர் 24 ஆந் திகதி ஆரம்பிக்கப்பட்டிருந்தது. கணக்காய்வுத் திகதியான 2023 மார்ச் 02 ஆந் திகதியளவில் அந்த செயற்திட்டத்தின் 14 பணிகளை நிறைவேற்றுவதற்காக ரூபா 28,530,317 செலுத்தப்பட்டிருந்த போதிலும், இந்த செயற்திட்டத்தை நிறைவு செய்ய வேண்டிய காலம் தொடர்பில் உரிய முறையில் திட்டங்கள் தயாரிக்கப்பட்டிராததுடன், அது ஆரம்பிக்கப்பட்டு மீளாய்வாண்டின் இறுதியளவில் 03 வருடங்கள் கடந்த போதிலும், அதன் பௌதீக செயன்முன்னேற்றம் சுமார் 50 சதவீதமாக காணப்பட்டது. | எதிர்பாராத வகையில் மண்சரிவு ஏற்பட்ட காரணத்தால் திட்டமிடப்பட்டவாறு செயற்திட்டத்தின் நிர்மாணப் பணிகளை நிறைவு செய்ய முடியாதிருந்தது. | செயற்திட்டத்தை ஆரம்பிப்பதற்கு முன்னர் சாத்தியவள கற்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டியதுடன், உத்தியோகத்தர்களின் கவனயீனம் காரணமாக ஏற்பட்டுள்ள இந்த நட்டம் தொடர்பில் உரிய பொறுப்புக்கூற வேண்டிய உத்தியோகத்தர்களுக்கு எதிராக உரிய ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

### 3.2 சொத்துக்கள் முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்பு | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| சீன அரசினால் நன்கொடையாக நீர் வழங்கல் அமைச்சிற்கு கையளிக்கப்பட்டிருந்த ரூபா 39,183,806 (USD 211,142.40) பெறுமதியான நடமாடும் நீர் தரப் பரிசோதனை வண்டி 2022 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் எதுவித பரிசோதனையிலும் ஈடுபடுத்தப்படாது விளைவற்ற | அமைச்சின் செயலாளரின் கீழ் காணப்படும் இந்த வசதியை பயன்படுத்துமாறு அமைச்சரவையின் ஊடாக தரப்பினருக்கு மூன்று தடவைகள் நினைவுறுத்தற் கடிதங்கள் அனுப்பப்பட்டன. | இந்த நடமாடும் நீர் தரப் பிசோதனை வாகனத்தினை பயன்படுத்துவதற்கு தேவையான நடவடிக்கைகள் துரிதமாக மேற்கொள்ளப்பட வேண்டும். |

முறையில் அமைச்சிக் வளாகத்தில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தது.

## 3.3 நட்டங்கள் மற்றும் இழப்புகள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்பு | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | அமைச்சின் 04 வாகனங்களுக்கு 05 சந்தர்ப்பங்களில் ஏற்படுத்தப்பட்டிருந்த விபத்துகள் தொடர்பில் உரிய விபத்து ஏற்பட்டு 01 முதல் 05 வருடங்களுக்கு இடைப்பட்ட காலம் கடந்திருந்த போதிலும், இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப்பிரமாணக் கோவையின் 104(1), 104(3) மற்றும் 104(4) பிரமாணங்களுக்கமைய செயற்பட்டு அதற்குரிய ரூபா 492,280 கூட்டுத்தொகையான நட்டங்கள் தொடர்பில் பொறுப்புக்கூற வேண்டியவர்களை இனங்கண்டிருக்கவில்லை. | 2022 ஆம் ஆண்டுக்கு முன்னர் இடம்பெற்ற வாகன விபத்துகள் தொடர்பில் நி.பி. 104 பரிசோதிக்கப்பட்டிராததுடன், பழுதுபார்த்தல் தொகையானது காப்பீட்டிலிருந்து செலுத்தப்பட்டுள்ளது. 2022 ஆம் ஆண்டு முதல் இடம்பெறும் அனைத்து விபத்துகளுக்கும் உரிய நி.பி. 104 பரிசோதிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | இந்த விபத்து மற்றும் அதன் மூலம் அரசாங்கத்திற்கு ஏற்பட்ட நட்டம் தொடர்பில் நிதிப்பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஆ) | அமைச்சரின் பிரத்தியேக செயலாளருக்கு வழங்கப்பட்டிருந்த ரூபா 12,000,000 மதிப்பீட்டு பெறுமதியுடைய வாகனமொன்று 2022 மே 09 ஆந் திகதி முதல் இராஜாங்க அமைச்சு இரத்தான பின்னர் 2022 யூன் 20 ஆந் திகதி அமைச்சிற்கு கையளிக்கப்பட்டிருந்தது. அதன் போது அந்த வாகனம் விபத்திற்குள்ளாகியிருந்தமை அவதானிக்கப்பட்டது. அது தொடர்பில் உரிய | நி.பி. 104 விசாரணைக் குழு அறிக்கையின் பிரகாரம் பழுதுபார்த்தல் செலவினம் காப்புறுதிக் கம்பனியிலிருந்து மீளளிப்பு செய்யப்படாத காரணத்தால் குறித்த தொகையை சாரதியிடமிருந்து அறவிடுவதற்கு 2023 ஏப்ரல் 30 ஆந் திகதி வரையிலும் காலம் வழங்கப்பட்டுள்ளது. | நிதிப்பிரமாணத்தின் பிரகாரம் செயற்பட்டு அரசாங்கத்திற்கு ஏற்பட்டுள்ள நட்டத்தினை பெற்றுக்கொள்ள நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | காலத்தில் பொலிஸ் மற்றும் காப்புறுதி நிறுவனத்திற்கு அறிவித்திருக்காமை காரணத்தால் விபத்திற்குரிய மதிப்பிடப்பட்ட பழுதுபார்த்தல் செலவினமான ரூபா 572,700 செலுத்துவதற்கு காப்புறுதி கம்பனி நிராகரித்திருந்தது. எவ்வாறான போதிலும், இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப்பிரமாணத்தின் பிரகாரம் செயற்பட்டு, மேற்குறிப்பிட்டவாறு அரசாங்கத்திற்கு ஏற்பட்டுள்ள நட்டத்திற்கு பொறுப்புக்கூற வேண்டியவர்களை இனங்கண்டு அறவிடுவதற்கு 2023 மார்ச் 27 ஆந் திகதி வரையிலும் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | | |
| (இ) | கடமைகளுக்காக அமைச்சின் அலுவலகத்திற்கு வழங்கப்பட்டிருந்த ரூபா 1,387,192 பெறுமதியான கெமரா உபகரணங்கள், அச்சீட்டு இயந்திரமொன்று மற்றும் மடி கனிணியொன்று அமைச்சரின் அரசியல் அலுவலகத்தில் வைத்து 2022 மே 09 ஆந் திகதிய நாட்டில் ஏற்பட்ட குழப்ப நிலைமை காரணமாக அழிவடைந்ததாக 2022 நவம்பர் 22 ஆந் திகதிய ஆரச்சிக்கடுவ பொலிஸ் நிலைய அதிபர் (ப.க.) முகவரியில் அமைச்சிற்கு அறிவிக்கப்பட்டிருந்தது. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப் பிரமாணக் கோவையின் 104(1) ஆம் பந்திக்கமைய குறித்த அழிவு நட்டம் இடம்பெற்றவுடன் விசாரணை நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காக நிதிப்பிரமாணம் 103(1)(அ) இன் பிரகாரம் குறித்த அதிகாரிகளுக்கு | நிதிப்பிரமாணம் 104 இன் பிரகாரம் விசாரணைச் சப நியமிக்கப்பட்டுள்ளதுடன், அறிக்கை கிடைத்த பின்னர் உரிய நடவடிக்கை எடுக்கப்படும். | நிதிப்பிரமாணத்தின் பிரகாரம் செயற்பட்டு அரசாங்கத்திற்கு ஏற்பட்டுள்ள நட்டத்தினை பெற்றுக்கொள்ள நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | அறிவிக்கப்பட்டிராததுடன், அந்த அழிவு ஏற்பட்டு 196 நாட்களின் பின்னர் பொலிஸில் முறைப்பாடு செய்யப்பட்டிருந்ததாக பொலிஸ் அறிக்கையில் வெளிப்படுத்தப்பட்டது. அவ்வாறே, அந்த சம்பவம் தொடர்பில் நிதிப்பிரமாணத்தின் பிரகாரம் உரிய விசாரணை நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள பொறுப்புக்கூற வேண்டியவர்களை இனங்காண்பதற்கு கணக்காய்வு திகதியான 2023 மே 02 ஆந் திகதி வரையிலும் முடியாதிருந்தது. | | |

## 4. மனிதவள முகாமைத்துவம்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்பு | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | அமைச்சின் அங்கீகரிக்கப்பட்ட பதவியணிக்கமைய 2022 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளபடியாக சிரேஷ்ட மட்டத்திலான 01 பதவி மற்றும் இரண்டாம் நிலையிலான 06 பதவிகளின் மிகையொன்று அவதானிக்கப்பட்டது. அவ்வாறே, அத்திகதியில் உள்ளபடியான அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினுள் 14 சாரதி பதவிகள் காணப்பட்டதுடன், உள்ளபடியான பதவியணி 10 ஆனமையால் இந்த பதவியில் 04 வெற்றிடங்கள் காண்பிக்கப்பட்டிருந்த போதிலும், தேசிய நீர்வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபையிடமிருந்து பெற்றுக்கொள்ளப்பட்ட 07 சாரதிகளும் அமைச்சின் | அமைச்சின் பதவிநிலை உத்தியோகத்தர்களுக்கு ஒதுக்கப்பட்டுள்ள வாகனங்களுக்காக போதிய எண்ணிக்கையிலான சாரதிகள் இல்லாதிருந்தமையால் நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு சபையிலிருந்து சாரதிகள் இணைப்புச் செய்யப்பட்டுள்ளனர். வெற்றிடங்கள் நிரப்பப்பட்டதன் பின்னர் மீண்டும் சாரதிகள் குழாத்தில் இணைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | தேவைக்கேற்ப பதவிகள் அங்கீகரிக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | சேவையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளமையால் 03 ஆன மிகையொன்று அவதானிக்கப்பட்டது. | | |
| (ஆ) | நீர் வழங்கல் அமைச்சரின் தனிப்பட்ட பதவியணியின் பதவிகளுக்காக அமைய மற்றும் ஒப்பந்த அடிப்படையில் 2022 ஆம் ஆண்டின் போது இணைத்துக்கொள்ளப்பட்ட உதவிப் பதவியணியின் 15 உத்தியோகத்தர்கள், அரச செலவினங்கள் தொடர்பிலான 2010 மே 14 ஆந் திகதிய சீஏ/1/17/1 ஆம் இலக்க சனாதிபதி அலுவலகத்தின் கடிதத்தின் 2.2 ஆம் பந்திக்கமைய அங்கீகரிக்கப்பட்ட ஆட்சேர்ப்பு நடைமுறையில் குறிப்பிடப்பட்டுள்ள தகைமைகளை பூர்த்தி செய்துள்ள உத்தியோகத்தர்கள் என்பதை உறுதிப்படுத்துவதற்கு உரிய தகவல்கள் கோவையினுள் காணப்படவில்லை. | கல்வித் தகைமைகள் மற்றும் தொழில்சார் தகைமைகளை உறுதிப்படுத்தும் ஆவணங்கள் அமைச்சிற்கு கிடைத்திருக்கவில்லை. | சுற்றறிக்கை அறிவுரைகளுக்கமைய நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (இ) | அரச செலவின முகாமைத்துவம் தொடர்பிலான 2010 மே 14 ஆந் திகதிய சீஏ/1/17/1 ஆம் இலக்க சனாதிபதி அலுவலகத்தின் கடிதத்தின் 2.1 ஆம் பந்திக்கமைய கௌரவ அமைச்சரின் பதவியணி ஆகக்கூடியது 15 பேரை விஞ்சலாகாத போதிலும், 2022 மே 24 ஆந் திகதியளவில் அமைச்சின் பதவியணியாக 18 உத்தியோகத்தர்கள் சேவையில் ஈடுபடுத்தப்பட்டிருந்தனர். | அமைச்சரின் பிரத்தியேக செயலாளரின் கோரிக்கை மற்றும் துரித கடமைத் தேவைப்பாடுகள் தொடர்பிலும் கவனம் செலுத்தி அமைச்சரின் பதவிக் காலத்திற்க மாத்திரம் செல்லுபடியாகும் வகையில் மேலும் 03 பதவிகளுக்காக நியமனங்களை வழங்க நேர்ந்தது. | சுற்றறிக்கை அறிவுரைகளுக்கு முரணான மேற்கொள்ளப்பட்டுள்ள இந்த நியமனங்கள் மூலம் அரசாங்கத்திற்கு செலவிட நேர்ந்துள்ள நட்டத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |